(3) தகவல் கோரல்:

(அ) சென்னை நகரில் சாலை விபத்துக்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் சுந்தரமூர்த்தி அவர்கள் மிகப்பெரிய விபத்தில் இருந்து தப்பி இருக்கிறார். அவர் சென்ற ஆட்டோவை பின்னாலே இருந்து வந்த ஒரு லாரி இடித்து அந்த ஆட்டோ முன்னாலே போன டாங்கரில் மோதி இருக்கின்றது. அவர் தப்பி இருக்கிறார். சென்னை நகரில் இப்படி விரிவான விபத்துக்கள் நடப்பது வாடிக்கை ஆகிவிட்டது. அதைப்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஒதுக்கித் தரலாம், ஆனால் இப்போது அதற்கு நேரம் இல்லை.

(ஆ) வடபழனி கோயில் நிலம் விற்பனை.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி கோயிலுக்குச் சொந்தமான 216 கிரவுண்டு நிலத்தை அநியாயமாக விற்பனை செய்து கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்க்காருக்கு நஷ்டம் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) கொடுத்திருந்தால் பார்க்கலாம். (குறுக்கீடு) இப்போது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு என். வி. என். சோமு அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அலுவலகம் அனைத்தையும் கவனிக்கும். அந்த அலுவலகத்தை வேலை செய்வதற்கு நீங்கள் விடவேண்டும். அமைதியாக இருந்தால் ஒவ்வொருநாளும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டவருக்குத் தண்டனை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலையிலே பால் வழங்கும் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்